வெளியீடு எண் 79.

தருமபுர ஆதீன

# ஆவணிமூலத் திருநாள்

அமரர் கி. அருணாசல முதலியார்
அவர்களின் நினைவாக அன்பளிப்பு.
அளிப்பவர்:
திருமதி சியாமளா அருணாசலம்
(1982) சீர்காழி.

LIBRARY

தருமபுர ஆதீனம்.



திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

வெளியீடு எண் 79

உ
குருபாதம்
திருச்சிற்றம்பலம்

தருமபுர ஆதீன

# ஆவணிமூலத் திருநாள்

இது
திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25-வது மகாசந்நிதானம்
ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
ஆக்ஞைப்படி
வெளியிடப்பெற்றது.

தருமபுர ஆதீனம்
1945

முதற்பதிப்பு
பிரதிகள் 500

தருமபுர ஆதீனம்
ஞானசம்பந்தம் பதிப்பகத்தில்
பதிப்பிக்கப்பெற்றது.

சிவமயம்

## தருமபுர ஆதீன

# ஆவணிமூலத் திருநாள்

பிட்டு நேர்பட மண்சு மந்த
பெருந்து றைப்பெரும் பித்தனே
சட்ட நேர்பட வந்தி லாத
சழக்க னேனுனைச் சார்ந்திலேன்
சிட்ட னேசிவ லோக னேசிறு
நாயி னுங்கடை யாயவெங்
கட்ட னேனையு மாட்கொள்வான் வந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே

அகம் நிறைந்த அன்பினராய் அறுபகை செற்று, ஐம்புலனும் அடக்கி, உள்ளக்கமலத் தோங்கிய பரஞானவெளியிலே கண்டு களித்து வணங்குவார்க்குத் தேனுமாய் அமுதமுமாய்த் தித்திக்குஞ் சிவபெருமான், ஆன்மாக்கள் காலை மாலை எப்பொழுதும் தொடுத்த மலரொடு தூபமுஞ் சாந்துங்கொண்டு புறத்தே வழிபாடுசெய்துய்யும் பொருட்டுச்

சிவலிங்கம் முதலாகிய திருமேனிகொண்டு எழுந்தருளியிருக்கும் இடங்களாகிய திருக்கோயில்கள் பலவாகும். அவைகளுள் மிகச் சிறப்புடையதும், விராட்புருடனது துவாத சாந்தமாக விளங்குவதும், அம்மை அப்பன் குமரன் ஆகிய மூவரும் ஒருசேர ஒருகாலத்து முறையே தடாதகாதேவி, சவுந்தரமாறன், உக்கிர குமாரன் என்ற திருநாமங்களோடு வீற்றிருந்ததும், தலத்திருநாமத்தைக் கேட்டார்க்கு முத்தியளிக்க வல்லதும் மதுரைத் தலமேயாம். அச்சிறப்புப் பற்றியே சிவதலங்கடோறுஞ் சென்று பெருமானை வழிபட்டு ஆங்காங்கு திருப்பதிகங்களைப் பாடி, பாமாலை சூட்டிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரும் திருநாவுக்கரசு சுவாமிகளும் ஆலவாயண்ணலைத் தரிசித்துப் பாமாலை சூட்டுங்காலத்தில் முறையே "ஞால நின் புகழே மிகவேண்டும்" எனவும், "ஆதியே ஆலவாயில் அப்பனே அருள் செயாயே" எனவும் வேண்டிக்கொள்வாராயினார்கள்.

இத்தகைய ஓங்குயர் விழுச்சீர்வாய்ந்த தலப்பெருமானாகிய சோமசுந்தரக் கடவுள் திருவருட் குறிப்பின் வழியே நின்றவர்கள்

ஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளாவார்கள். இவர்களே தசகாரியத்தின் முடிபவாகிய சிவபோகத்தின் சாரத்தை வெண்பாயாப்பினாலே உலகத்திற்கு அருளிச்செய்தவர்கள்; தருமபுர ஆதீனத்தில் சைவ சித்தாந்த ஞான பீடாதிபதியாய் - ஆதீனஸ்தாபகராய் விளங்கியவர்கள்; ஸ்ரீ வில்லிபுத்தூரில் சைவ வைசிய வேளாண்மரபில் அவதரித்தவர்கள்.

இவர்கள் தனது தாய்தந்தையர்களுடன் ஆத்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளைத் தரிசித்து வழிபடற் பொருட்டு மதுரைக்கு வந்தகாலத்துப் பொற்றாமரைத் தடாகக்கரையில் அடியார்கள் சிவபூசை செய்துகொண்டிருத்தலைக் கண்ணுற்றார். தாமும் அவ்வாறு பூசித்து ஆனந்தமுற விரும்பினார். பெருமான் திருவருளாணையின் வழியே மறுநாள் தடாகத்திற்குச் சென்று ஈசான மூலையில் மூழ்கிப்பார்க்குங் காலத்துக் கண்ணுக்கினிய பொருளாகிய இலிங்கத் திருவுருவம் பெட்டகக் கோயிலோடு கரத்தில் எழுந்தருளியது. எல்லையில்லா ஆனந்தங்கொண்டார். அத்துடன் ஆலயத்தை

யடைந்தார்; பணிந்தார். ஆனந்தவெள்ளப் பெருக்கு **சொக்கநாதக் கலித்துறை** என்னும் பாமாலையாக வெளிவரலாயிற்று. அதன் முதற்பாடல்,

> கண்ணுக் கினிய பொருளாகி
> யேயென் கரத்தில்வந் தாய்
> விண்ணும் பரவிடு மற்புத
> மேயென்ன விஞ்சையிதான்
> மண்ணும் புகழ்ந்திட வென்னையும்
> பூரண வாரியுள்ளே
> நண்ணும் படிசெய் மதுரா
> புரிச்சொக்க நாயகனே.

என்பதாம்.

பின்னர், "கருதுவார் கருத்தறிந்து முடிக்கும் கருணைவள்ளலே! மற்றுமோர் விண்ணப்பம் ஒன்று உண்டு. அதாவது தேவரீர் அருளால் கிடைத்த இவ்விலிங்கத்தைப் பூசித்தற்கு ஏதுவாகிய சிவஞானோபதேசம் செய்தருளும் குருமூர்த்தியையுங்காட்டியருள வேண்டும்" என்று விண்ணப்பித்து, அவர் ஆணைப்படியே திருவாரூருக்குச் சென்று

திருநந்திதேவர் மரபு மெய்கண்ட சந்தான வழிவந்த ஞானகுரவராகிய கமலை ஞானப் பிரகாச தேசிகரிடத்தில் சோமவார நன்னு ளில் ஞானதீக்கையும், ஞானேபதேசமும் பெற்ருர். "மூர்த்தி தலந் தீர்த்தம் முறை யாத் தொடங்கினர்க்கு வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும்" என்பது பெரியோர் கூற்றன்றே? பின்னர் குரு ஆணையைச் சிரமேற்கொண்டு ஆரூரையகன்று தருமபுரத்திற்கு வந்தார். ஓர் ஆசிரமம் அமைத்து அதில் ஆலவாயண்ணல் பேரருட்டிறத்தால் கிடைக்கப்பெற்ற ஸ்ரீ சொக்கலிங்கப் பெரு மானையும் எழுந்தருளச்செய்து பூசித்து வந் ததோடு தம்மை வந்தடைந்த பக்குவிகட் கும் ஞானதீக்கை ஞானேபதேசம் முதலி யன செய்து, சிவஞானசித்தி நெறிகாட்டி, குருராய தேசிக மணியாய் - மெய்கண்டசந் தானதேசிக பீடாதிபதியாய் விளங்கினர். அது முதற்கொண்டு மெய்கண்டசந்தான மாகிய தருமபுர ஆதீனத்தில் ஆதிகுருஞான சம்பந்த தேசிகருக்குப் பிற்ருேன்றலாக - ஞான மூர்த்திகளாக - சற்குருமணிகளாக எழுந்தருளியிருந்து அருட்செங்கோல் செலு

த்தி ஞானப்புகழ்பெற்று வருகின்ற குரு மகாசந்நிதானங்களுக்கெல்லாம் ஸ்ரீ சொக்க லிங்கப்பெருமானே ஆத்மார்த்த பூஜாமூர்த்தி யாக விளங்கி வருகின்றது.

அப்பெருமான் அருளுருக்கொண்டு இயற் றிய திருவிளையாடல்கள் அறுபத்துநான் கெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அவை களுள் சைவசமய பரமாசாரிய சுவாமிகளில் ஒருவராகிய மணிவாசகசுவாமிகள்பொருட்டு நிகழ்ந்தன வாதவூரடிகளுக் குபதேசித்தது, நரிபரியாக்கியது, பரிநரியாக்கியது, மண் சுமந் தது என்பனவாம். அரிமர்த்தன பாண்டி யனின் ஆணையின் வழியே காவலாளிகளால் துன்புறுத்தப்பட்ட மணிவாசகரது இடுக் கண் களைவான் வேண்டிச் சோமசுந்தரப் பெருமான் காட்டிலுள்ள நரிகளைப் பரிக ளாகவும், கணநாதர்களை அவைகளில் இவர்ந்து செல்லும் சேவகர்களாகவும்ஆக்கித் தாமும் வேதமாகிய குதிரையின்மீது ஏறிக் கொண்டுவந்து திருவருள் பாலித்தநாள் **ஆவணிமூலத் திருநாள்** ஆதலின் அந்நாளைச் சிறப்பாகக் கொண்டு முறையாக விழா கொண்டாடப்படுகிறது. ஆயினும் முன்

னார்க் கூறிய திருவிளையாடல்கள் நான்கனுள் இறுதிக்கண்ணதாகிய மண்சுமந்த திருவிளையாடல் எளியவளும் அன்புமிகுந்தவளுமாகிய பிட்டு விற்றுண்ணும் வந்தியின் பொருட்டு பெருமான் எளிவந்து கூலியாளாகிப் பிட்டுக்கு மண்சுமந்து மாணிக்கவாசகப் பெருமானை அமைச்சுத் தொழிலினின்றும் விடுவித்து ஞான மார்க்கத்தில் செலுத்திய வரலாற்றினைக் கூறும் பகுதியாதலின் அதனைச் சிறப்பாகக் கொண்டு ஆவணிமூலத் திருவிழா - பிட்டுத் திருவிழா எனவும் வழங்கப்படுகிறது. **ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானை ஆத்மார்த்த மூர்த்தியாகப் பூசித்து வரும் தருமபுர ஆதீன கர்த்தரவர்களும் இத்தகைய விழாவைக் கொண்டாட வேண்டுவது இன்றியமையாததாயிற்று.** ஆகவே ஆண்டுகள் தோறும் நடைபெற்று வருவதுபோல் இவ்வாண்டிலும் தருமபுர ஆதீனத்தில் 25-வது அருட்குருமூர்த்திகளாய் எழுந்தருளியிருந்து ஒல்லும் வகையால் சமயப்பணி செய்துவரும் **ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளால் ஆவணிமூலத் திருவிழா கொண்டாடப் படுகிறது.**

உ

சிவமயம்

# மண்சுமந்த திருவிளையாடல்

திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் றன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

மாணிக்கவாசக சுவாமிகள் குதிரைவாங்கி வரும்பொருட்டுக் கொண்டு சென்ற அரிமர்த்தனபாண்டியனது பொருள்களை எல்லாம் திருப்பணி திருவிழா முதலியவற்றிற்கும் சிவனடியார்கட்கும் உபயோகித்ததனல் அரசன் கோபங்கொண்டு மாணிக்கவாசகரைத் தண்டிக்க உத்திரவிட்டான். தண்டனைக் குட்பட்ட மாணிக்கவாசகரது துன்பத்தைத் துடைத்தற் பொருட்டு ஆவணி மூலத்துன்று பெருமானுல் கொண்டுவரப்பெற்ற பரிகளெல்லாம் இரவு நரிகளாகமாறி நகரத்திற்குத் துன்பமுண்டாக்கிக் காட்டிற்குச் சென்றன. இச்செய்தியை அறிந்த அரசன் தண்டலாளர்களை நோக்கி "அமைச்சரை அழைத்

துச்சென்று தடுத்தும் ஈர்த்தும் மீண்டினுல் வலிசெய்தும் நமது பொருண் முழுதையும் வாங்குங்கள்'' என்று ஆணையிட அவர்களும் அவ்வாறே கடும்பகலுச்சிப் பொழுதிலே சூரியனைப்பார்க்கும்படி நிறுத்தித் துன்புறுத்தினுர்கள். அடியார் இடுக்கண்கண்ட பெருமான் சகிப்பரோ? மணிவாசகப் பெருமானுடைய பெருமையினைப் பாண்டியனுக்கு அறிவிக்கவும், திருமுடியில் மண்சுமக்கவும், வந்தி என்பாளைச் சிவலோகத்திற் சேர்க்கவும் திருவுள்ளங்கொண்ட சோமசுந்தரக் கடவுள் வைகையாற்றினைப்பெருகச் செய்தனர். ஆற்றின்பெருக்கோ நகரத்தை அழிக்கத்தொடங்கியது. பாண்டியன் ஆணையின்படி அமைச்சர்கள் குடிமக்கள் யாவருக்கும் ஒவ்வொருபங்கு அளந்து கொடுத்து ஆற்றுப்பெருக்கினைத்தடுக்குமாறு செய்தார்கள். அதில் பங்கு கொண்ட வந்தி என்பாள் தனக்குக் கூலியாள் கிடைக்கவில்லையே என்று வருந்தி ஏங்குங்காலத்தில் பெருமான் கூலியாள் வேடங்கொண்டு வந்து வந்தியினது உத்தரவு பெற்று அவளால் கொடுக்கப்பெற்ற பிட்டினை உண்டு ஆற்றின் கரையினை அடைக்

கச் சென்றார். சென்றவர் தாம் மேற்கொண்ட செயலைச்செய்யாமல் திருவிளையாடல் செய்வாராயினர்.

குடிமக்கள் யாவரும் கரையினை அடைத்து விட்டார்களா என்றுபார்வையிடச் சென்ற அரசன் வந்தியின் பங்கு அடைபடாதிருத்தலைக்கண்டு கோபங் கொண்டான். அருகிலுள்ளவர்கள் "உள்ளொடு புறங்கீழ் மேலாய் உயிர்தொறும் ஒளித்து நின்ற கள்வனை இவன்றான் வந்தியாளெனக் காட்டி நின்றார்"கள். கள்வனைக்கண்ட அரசனுக்கு கோபம் அதிகரித்தது. தனது கையிலுள்ள பிரம்பினுல் முதுகில் அடித்தான். அடிபட்ட கள்வனும் கூடையோடு மண்ணை உடைப்பிலே கொட்டி மறைந்தருளினன். கரையும் அடைபட்டது. கள்வன் முதுகிற்பட்ட அடியோ அசையும்பொருள் அசையாப் பொருள் ஆகிய இருவகைப் பொருள்கள் மீதும் பட்டது. திருமால் விழித்தனன்; பிரமன் வியப்புற்றான்; இந்திரன் அஞ்சினன்; தேவர்கள் நடுங்கினர்;

வந்தியம்மையாரை சிவகணங்கள் வந்து அன்னையே வருக என்று அழைத்து விமானத்

திலேற்றி அமரர் பூமழைபொழியச் சிவலோகத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

கூலியாள் மறைந்ததையும், கரையுயர்ந்ததையும், சராசரங்கள்மீது அடிபட்டதையும் கண்டு வியப்புற்ற அரசனுக்குப் பெருமான் அசரீரியாக, "பாண்டியனே! உன்பொருள்களெல்லாம் அறவழியிலே சம்பாதிக்கப்பட்டன ஆதலின் அவை நமக்கும் நம்மைச் சார்ந்தவர் தமக்கும் வாதவூரன் உதவினான். அதனால் அவனைத் துன்புறுத்தினாய்; அதனை நீக்கற்பொருட்டு நரித்திரளைப் பரித்திரளாக்கினோம்; வைகையை பெருகச் செய்தோம்; கூலியாளாகவும் வந்து மண்சுமந்து அடிபட்டோம். இவ்வாறு நாம் செய்த விளையாடல்கள் எல்லாம் வாதவூரன் பொருட்டேயாம். ஆதலின் அவனை அவன் விருப்பின்படியே விடுக. நீயும் நிறைசெல்வமும் நீடுவாழ் நாளும் பெறுவாயாக" என்று அருளிச் செய்தனர். அரசனும் அளவிலா ஆனந்த முற்று வாதவூரரை வணங்கி "அடியேன் செய்த பிழைபொறுத்து இப்பூமியை அரசாளுக" என்று விண்ணப்பிக்க வாதவூரர் "அரசனே! உங்கள் நாயகன் அருள் செய்தவாறே செய்

வீராக. பெருமான் என்னைச் சிதம்பரத்திற்கு வருக என ஆணையிட்டிருக்கின்றார் ஆதலால் என்னைப் போகும்படிச்செய்க" என்று மறு மொழி பகர்ந்து சோமசுந்தரக் கடவுளிடம் விடைபெற்றுப் புறப்பட்டுப் பல திருத்தலங்களையும் வணங்கிக் கொண்டு சிதம்பரஞ் சார்ந்தார். திருவாசகம், திருக்கோவையார் ஆகிய அருட்பாக்களை அருளிச்செய்து, புத்தரை வாதில் வென்று, சோழன் மகளை ஊமைதீர்த்தருளிச் சிற்சபையில் மறைந்தருளினார்.

இரும்புதரு மனத்தேனை
ஈர்த்தீர்த்தென் னென்புருக்கிக்
கரும்புதரு சுவையெனக்குக்
காட்டினையுன் கழலிணைகள்
ஒருங்குதிரை யுலவுசடை
யுடையானே நரிகளெல்லாம்
பெருங்குதிரை யாக்கியவா
றன்றேயுன் பேரருளே.

உ

சிவமயம்

ஸ்ரீமத் குருஞானசம்பந்ததேசிக சுவாமிகள்

அருளிச்செய்த

# சொக்கநாதக் கலித்துறை

கண் ணுக் கினிய பொருளாகி
யேயென் கரத்தில்வந்தாய்
விண் ணும் பரவிடு மற்புத
மேயென்ன விஞ்சையிதான்
மண் ணும் புகழ்ந்திட வென்னையும்
பூரண வாரியுள்ளே
நண் ணும் படிசெய் மதுரா
புரிச்சொக்க நாயகனே. 1

ஆதார மிங்கிலத் துன்னையல்
லாலெனக் காருளரோ
மீதான மான வெளியினைக்
காட்ட விரைந்துடன்வந்
தோதாம லோதி யெனைவச
மாக்கினை யுள்ளொளியா
நாதா வருள்செய் மதுரா
புரிச்சொக்க நாயகனே. 2

கல்லது நெஞ்ச மிரும்பே
யிருசெவி கண்கண் மரஞ்
சொல்லுவ தும்பொய் யவமே
தொழில்துக்க சாகரமா
மல்லலென் டாங்குநின் னன்பர்பங்
கானந்த மாகவைத்தாய்
நல்லது நல்ல மதுரா
புரிச்சொக்க நாயகனே. 3

பாடும் படிசெய் நினைநினைந்
தேத்திப் பணிந்தெழுந்தே
யாடும் படிசெய் மலமைந்து
மேயடி யேனுளத்தே
வீடும் படிசெய்நின் ஞானந்த
சாகர யேலெனவே
நாடும் படிசெய் மதுரா
புரிச்சொக்க நாயகனே. 4

ஏருத விண்ணப்பங் கூறுநின்
றேனஃ தேதெனிற்கேண்
மாறும விந்த மகாலிங்கந்
தன்னின் மகிழ்ந்திருந்தே
வாராப் பவத்துய ராற்றிச்
சிவானந்த மன்பர்க்கென்றும்
பேருக நல்குதி மாமது
ராபுரிப் பிஞ்ஞகனே. 5

ஆகங் கரணம் புவனங்கள்
    போகங்க ளானதெல்லா
மோகம் பொருந்தவைத் தாட்டுதி
    யேன்மும் மலாதியெல்லாம்
போக விடுத்தெனக் கானந்தங்
    காட்டப் பொறியுனக்கே
நாக மசைக்கு மதுரா
    புரிச்சொக்க நாயகனே. 6

ஆடாம லாடிப் புலன்வழி
    யிற்போ யனுதினமும்
வாடாமல் வாடி மயங்கினின்
    றேமன வாக்கிறந்து
கூடாமற் கூடிச் சிவானந்த
    வெள்ளக் குணக்கடலை
நாடாம லுடை வருள்கூடல்
    வாழ்சொக்க நாயகனே. 7

பொய்யா மலமறுத் தென்னுளத்
      தானந்த பூரணத்தை
மெய்யா வளித்து விடாதுகண்
      டாய்விடி லோகெடுவேன்
ஐயா வெனதுயி ரேவினை
      மார்க்கத் தழுத்தியென் று
னையா தருள்செய் மதுரா
      புரிச்சொக்க நாயகனே. 8

பிறவாத சென்ம மழுந்தாத
      துன்பம் பிறந்தடியேன்
இறவாத தானமு முண்டுகொ
      லோவெளி யேன்றிரும்ப
அறவாவிங் கென்னை யினியாட்டல்
      போதுநின் ஞனந்தத்தே
னறவார் பொழின்மன் மதுரா
      புரிச்சொக்க நாயகனே. 9

செய்யாத பாதக மொன்றில்லை
யொன்ருென்று செய்ததெல்லா
மையா வளவில்லை நீயே
யறிவையஃ தியார்செயலோ
மெய்யா வுயிர்க்குயி ரேயடி
யேனிவ் வினையிலென்று
நையாம லாள்வை மதுரா
புரிச்சொக்க நாயகனே. 10

அறிவைத் திருப்பிநின் பாதாரவிந்த
மடைய வல்ல
நெறியைக் கொடுத்து நிறுத்தினை
யேநின்ம லாவினியென்
பொறியைத் தவிர்த்துநின் ருனந்த
சாகர பூரணத்தைப்
பிறிவற் றிருக்கவைப் பாயெனை
யாண்டருள் பிஞ்ஞகனே. 11

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்

## ஸ்ரீமத் குருஞானசம்பந்ததேசிக சுவாமிகள்
அருளிச்செய்த

# சொக்கநாத வெண்பா

ஆடரவஞ் சூழ்மதுரை யம்மானே யன்பருடன்
கூடவிளை யாடிவருங் கோமானே—நீடுபுகழ்
மென்மேலு மென்றனக்கு மேவியிடப் பொல்லாத
வென்மேல் வினைகெடுப்பா யே.

எல்லாமும் வல்லசித்த ரென்றக்கா லென்னுடைய
பொல்லாக் கருத்தகற்றப் போகாதோ—வல்லாடும்
பொங்கரா வேணிப் புனிதா மதுரைநகர்ச்
சங்கரா சொக்கநா தா.

இறந்தும் பிறந்து மிளைத்தே லிளியான்
மறந்தும் பிறவா வரந்தா—சிறந்தபுகழ்
ஞாலவா யாமுடிக்கு நாட்டுசூ ளாமணியா
மாலவாய்ச் சொக்கநா தா.

தவமோ சிறிதறியேன் றாரணிமேற் செய்யு
மவமோ வளவில்லை யாஞற்—சிவமோ
பெறுமாறென் கூடற் பிரானேமுப் பாச
மறுமாறென் சொக்கநா தா.

எவ்வினையை மாக்கள்பயி ரிட்டார்க ளிட்டவரே
யவ்வினையின் போக மருந்துதல்போற்—செவ்விதாய்த்
துன்மார்க்கஞ் செய்வார்க்குத் தோன்றும் பிறப்புமுத்தி
சன்மார்க்கஞ் சொக்கநா தா.

நோயால் வருந்தியுனை நாறுகுரற் கூப்பிட்டா
னீயாரெ ஞதிருக்கை நீதியோ—தாயா
யலைகொடுத்த கேழ லருங்குழவிக் கன்று
முலைகொடுத்தாய் நீயலவோ முன்.

ஆலந் தரித்தலிங்க மாலவாய்ச் சொக்கலிங்க
மூலமா யெங்கு முளைத்தலிங்கம்—பாலொளியா
மத்தனே கூடன் மதுரா புரியுமையா
ளத்தனே யாலவா யா.

நீரிலே மூழ்கிலுமெ ணித்தமருச் சிக்கிலுமென்
பாரிலே சுற்றிப் பணியிலுமென்—வேரிலே
யுற்றிருந்தா லன்றோ வுயிர்க்குறுதி யொன்றிரண்டு
மற்றவனே சொக்கநா தா.

அன்பார்க் கருள்புரிவ தல்லாமற் றேவரீர்
வன்பார்க் கருள்புரிய மாட்டீரே—வும்பர்தொழு
நல்லார் புகழ்மதுரை நாதரே தேவரீர்க்
கெல்லாமும் வல்லசித்த ரேன்.

ஆறுதலை யில்லை யடியேனுக் கன்பாகத்
தேறுதலை சொல்வார் சிலரில்லை—வேறெனக்குத்
திக்காரு மில்லை சிவனே பழிக்கஞ்சி
சொக்கேசநின் றருளே துணை.

உ

சிவமயம்

# தருமபுர ஆதீன மடாலயத்தில் எழுந்தருளியிருக்கும் சொக்கலிங்கப்பெருமான்மீது பாடிய

# சொக்கநாத மாலை

பொன்னமர ரரவின் பள்ளியான் வனசப்
    போதில்வாழ் நான்முக னென்று
மன்னமர் கற்ப தருநிழ லிருப்பான்
    வணங்கிநின் றனுதின மேத்தத்
தென்னமர ரமரர் நின்றுவாழ்த் தெடுப்பத்
    தெய்வஞா னப்பரஞ் சுடராய்த்
துன்னமர்ந் தனையா லருள்புரி தருமைச்
    சொக்கநா தப்பர சிவமே.

இளையவன் மயில்வா கனனமர் கடம்பென்
றெண்ணியீ சானமாந் திசையில்
வளையமா லூர வனந்தனி னுப்பண்
வரமுநி வரர்புடை சூழக்
களையவான் மாக்கட் கருளுருக் காட்டக்
கருதியே வந்தனை போலுஞ்
சுளையமர் கனியார் பொழிலுடைத் தருமைச்
சொக்கநா தப்பர சிவமே.

தெருவினிற் கூடை மண்ணெடுத் துழன்ற
செயலுடை நின்னுரு வத்தைப்
பெருமன முடையார் கண்டிடா திருக்கப்
பேணியோ திசையறிந் திடிலுக்
கருமையாஞ் சோலை நாப்பணி லேவந்
தமர்ந்தனை யென்றுசூழ் போகாத்
துருமம்விண் ணுலகின் மருவிடுந் தருமைச்
சொக்கநா தப்பர சிவமே.

ஆக்குபாண் டியனுங் கைதவ னெனும்பே
ரடைந்தவ ஞுடெனத் தெரிந்தோ
வாக்குரை முன்னங் கொடுத்தது முண்டோ
வளவர்நா டியற்றுபுண் ணியமோ
நீக்கும தில்லா திங்கள் வதிய
நினைந்தனை யெனதுபுண் ணியமே
தூக்குரை வாணர் போற்றிடுந் தருமைச்
சொக்கநா தப்பர சிவமே.

உலகுளோர் தவத்தின் றகையுமிவ் வாறென்
றுவந்தறிந் திடநினைத் தோநீ
யலகிலாச் சோலை நடுவினில் விரும்பி
யமர்ந்தறி ஞானசம் பந்தம்
விலகுருத் தேசிக னைத்தவம் புரிய
விடுத்தனை சொல்லுநின் னருளே
சுலவிட விளங்கும் புகழுடைத் தருமைச்
சொக்கநா தப்பர சிவமே.

மூடுத லில்லாச் சுவரின்மேல் வைத்த
முதிர்தலை யுற்றிடா விளநீர்
தேடுறு கன்னல் சந்தனக் கட்டை
திரவிய மிவையெடுத் தற்கு
நாடுறச் சிறுவ னிலையென வதுவு
நடந்திடச் செய்தனை சூழ்ந்து
தோடுலாம் வாவி மாடமர் தருமைச்
சொக்கநா தப்பர சிவமே.

நின்னது பூசைக் கெனமனத் தெண்ணி
நிறுத்திய கதலியின் றாற்றை
மன்னமர் வாளாற் குறைத்தவன் கரத்தை
வளைந்துபாம் பிருந்தவ னோடும்
பன்னுமவ் வண்ணாஞ் சந்நிதி வரவே
பாறிடச் செய்தனை நாளுஞ்
சொன்னாவல் வன்னி சேர்பொழிற் றருமைச்
சொக்கநா தப்பர சிவமே.

ஆட்டுதல் குறித்து வந்தவா னெய்யை
யாசையி லெடுத்தது நிரம்ப
வீட்டுமெண் ணெய்யைக் கலந்தவன் பேசா
திருந்தது கண்டவன் மனைவி
தாட்டுணை விரும்பிச் சந்நிதி கொணர்ந்து
சாற்றவும் பேசிடச் செய்தாய்
தோட்டுணை தட்டு மல்லர்சூழ் தருமைச்
சொக்கநா தப்பர சிவமே.

பாலிட நீரைக் கலந்தளித் தவடன்
பாலனைப் பரும்பிணி சேர்ந்து
கோலிட வதனைப் பின்னருந் தெரிந்துன்
குரைகழ றியானத்தில் வைத்து
மேலிட மூன்று பசுக்களைக் கொடுத்து
வேண்டிடத் தீர்த்தனை பொழிலிற்
சூலிடங் கொண்ட முகிலுலாந் தருமைச்
சொக்கநா தப்பர சிவமே.

மரந்தனிற் காய வைத்தசெங் காவி
மருவிய மடிதனை யெடுத்துப்
புரந்தனி லணிந்து வந்தவன் றேகம்
புழுநெளிந் திடவுட னடுங்கிச்
சிரந்தனி லேற்றுன் சந்நிதி வரவுஞ்
செய்யமோ னியனெத் திகழத்
துரந்தர னுக்கிப் பார்த்தனை தருமைச்
சொக்கநா தப்பர சிவமே.

ஈனசம் பந்தம் விலகியே வாழ்த
லியல்பென நின்னடி பேணி
மோனசம் பந்தங் கொண்டது தெரிந்தோ
முன்னர்போற் றோத்திரஞ் செய்ய
ஞானசம் பந்தப் பெயர்கொடுத் தருளி
னுட்டெனக் கனவிடைப் பணித்தாய்
தானசம் பந்த மில்லர்சூழ் தருமைச்
சொக்கநா தப்பர சிவமே.

ஆவணி மூலநா ளிற்சந் தனத்தா
லாட்டுபோ திடைவிடா தொளிரு
மாவணி யடியார் பலர்களுங் காண
மதுரையி னடந்தன மாற
தாவணி நரியுன் சந்நிதி நின்றுந்
தரிசிக்கச் செய்தனை யென்றுந்
தூவணி நகையார் மேவிடுந் தருமைச்
சொக்கநா தப்பர சிவமே.

வாதவூ ரடிக டமக்குப தேச
மன்னிடச் செய்தும்பின் நரியைக்
காதலிற் பரியா யவைகளை நரியாய்க்
காட்டியும் வையைநீ ரடைக்கப்
பூதல மறிய மண்ணெடுத் துழன்றும்
பொலிந்திட நின்றமுக் கணனே
சூதமார் பொங்கர் சூழ்ந்திடுந் தருமைச்
சொக்க நாதப்பர சிவமே.